# செல்வரும் ஏழை இலாசரும் (லூக் 16:19-31)

**முன்னுரை**

இறைத்தந்தையின் இரக்கத்தைப் படம் பிடித்துக் காட்டும் இரக்கத்தின் மூன்று உவமைகள் விவரிக்கப்பட்டுள்ள லூக்கா நற்செய்தியின் பதினைந்தாம் அதிகாரத்தைத் தொடர்ந்து வரும் அதிகாரத்தில் இரக்கம் காட்டாமறபோனதால் விளையும் நிலையை இயேசுவின் இவ்வுவமை விவரிக்கிறது. இதன் பின்னணி, இதன் விவரிப்புப் பகுதி, இதில் வரும் உரையாடல்கள் ஆகியவற்றினை விளக்கி இதன் வழி இயேசு கூற விரும்பும் இரக்கச் செய்தியை அறிந்துகொள்ள முயல்வோம்.

**உவமையின் பின்னணி**

இந்த உவமைக்கு முன் 14–18 வசனங்களில் லூக்கா பண ஆசைமிக்க பரிசேயர்களைப் பற்றி பேசுகின்றார் (வச. 14). அதற்கு முந்தைய பகுதிகளிலும் செல்வம் பற்றிப் பேசப்படுகின்றது. வச. 1–8 தலைவரின் உடைமைகளைப் பாழாக்கிய பொறுப்பாளனைப் பற்றியும், வச. 9 – 13 நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு நண்பர்களைத் தேடிக் கொள்வதைப் பற்றியும், நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நம்பத் தகுந்தவராக இருப்பது பற்றியும் இயேசு பேசுகின்றார். இன்னும் சொல்லப்போனால் செல்வத்தைப் பாழாக்குவது பற்றிய பேச்சு ஊதாரி மைந்தன் உவமையிலேயே தொடங்கிவிடுகின்றது (காண். லூக் 15:13,30). இன்னொரு விதத்தில் வச. 14–18 இந்த உவமைக்கு முன்னுரையாக அமைந்தாலும் இது மொத்தமும் (அதாவது வச. 14–18) அதற்கு முந்தைய பதின்மூன்றாம் வசனத்தின் விளக்க உரையாக அமைகின்றது. அதாவது, “எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது; ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது” (வச. 13) என்னும் வசனத்தின் விளக்க உரையாகவே வச. 14 முதல் இந்த உவமையின் முடிவு வரை அமைந்துள்ளது. இந்த புரிதலோடு இந்த உவமை இரக்கம் பற்றி தரும் செய்தியைக் காண்போம்.

**விவரிப்புப் பகுதி**

இந்த உவமையின் முதல் பகுதி (வச. 19–23) விவரிப்புப் பகுதியாக அமைகின்றது. எந்த வித உரையாடலும் இன்றி அது வேகமாக நிகழ்வுகளை விவரித்துக் கொண்டு செல்கின்றது. அடுத்து வரும் உரையாடல் பகுதி இந்த உவமையின் செய்தியை வெளிக் கொணர்ந்தாலும், இந்த விவரிப்புப் பகுதி அதற்குத் தகுந்த பின்னணியை உருவாக்கித் தருகின்றது. அதிலும் குறிப்பாக, செல்வர் மற்றும் ஏழை இலாசரைப் பற்றிய விவரிப்பு அவர்களுக்கு இடையே இருந்த இடைவெளியை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

**செல்வர்**

இவ்வுவமையில் செல்வரைப் பற்றிய விவரிப்பு ஒரே ஒரு வசனத்தில் கூறப்பட்டாலும், அதனுள் அவரின் செல்வச் செழிப்பையும், பண்பையும் விளக்கிவிடுகின்றார். இங்கு ‘விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை’ (வச. 19) என்பது பேரரசர்களுக்குரிய கருஞ்சிவப்புநிற உடையைக் குறிக்கும் (காண். ஆங்கிலம் – தமிழ்ச் சொற்களஞ்சியம், அ. சிதம்பரநாதன் (தலைமைப் பதிப்பாளர்), சென்னைப் பல்கலைக் கழகம், 2010, ப. 790). அதாவது, அவர் நாள்தோறும் அரச உடை அணிந்து, அரச வாழ்வு வாழ்ந்து வந்தார். அடுத்து, அவரது உணவுப் பழக்கம் குறிப்பிடப்படுகின்றது. அன்றைய பாலஸ்தினத்தில் சாதாரண குடிகளுக்கு விருந்து என்பது எப்போதாவது அரிதாய் அமைகின்ற அல்லது கிடைக்கின்ற ஒன்று. ஆனால் அத்தகைய விருந்தை அவர் நாள்தோறும் உண்டு வந்தார். ஆக மொத்தத்தில் அவர் ‘இன்புற்றிருந்தார்’ (வச. 19) என முடிக்கிறார் இயேசு. எனவே இன்பம் துய்ப்பது ஒன்றே அவரது ஒரே பண்பாக இருந்தது. அவரைப் பற்றிய வேறெந்த குறிப்பும் தரப்படவில்லை.

**இலாசர் எனும் ஏழை**

செல்வருக்கு நேர் எதிர் மாறாக ஏழை இலாசர் விவரிக்கப் படுகின்றார். செல்வரின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏழைக்கு இலாசர் எனும் பெயர் இருந்தது. அதற்கு ‘கடவுள் உதவுகிறார்’ என்று பொருள். இவரைப் பற்றி இரு வசனங்களில் விவரிக்கப்படுகின்றது. அவரைப் பற்றி இரு தரவுகள்

தரப்பட்டுள்ளன. ஒன்று, அவரது உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது (வச. 20), நாய்கள் அவரது புண்களை நக்கும் (வச. 21). இரண்டு, தன் பசியாற்றிக் கொள்ள செல்வருடைய மேசையிலிருந்து விழும் உணவுத் துண்டுகளுக்காய் காத்துக் கிடக்க வேண்டியிருந்தது. செல்வருக்கும் ஏழை இலாசருக்கும் இடையே எத்தகைய உரையாடலோ, வேறு எந்த செயல்பாடோ விவரிக்கப்படவில்லை. ஆனால் செல்வர் ஏழை இலாசரை அறிந்திருந்தார். அவர் பாதாளத்தில் இருந்த போது அவர் இலாசரைக் கண்டார் (வச. 23). அடையாளம் கண்டு கொண்டு இருமுறை இலாசரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் (வச. 24, 27). எனவே, செல்வர் உலக வாழ்வில் இலாசரை அறிந்திருந்தும் அவரை கண்டுகொள்ளவில்லை, மனம் இரங்கி உதவவில்லை.

**பாதாளத்தில். . .**

இந்த உவமையின் விவரிப்புப் பகுதியின் இறுதியில் சமூகத்தின் இரு வேறு நிலைகளிலிருந்த செல்வரும் ஏழை இலாசரும் ஒரே முடிவான மரணத்தைச் சந்திக்கின்றனர். அதற்குப் பிறகு அவர்களின் நிலை தலை கீழாக மாறிப் போகின்றது. செல்வர் பாதாளத்தில் வதைக்கப்படுகிறார், இலாசர் வானதூதர்களால் ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்க்கப்பட்டு (வச. 22–23) ஆறுதல் பெறுகிறார் (வச. 25). இப்போது வாசகருக்குத் தேவையானது, அல்லது அவர் அறிய விரும்புவது – ஏன் இந்தத் தலைகீழ் மாற்றம்? இதற்குக் காரணம் யார்? அல்லது என்ன? இதை மாற்ற முடியுமா?

இவ்வினாக்களுக்கெல்லாம் அடுத்து வரும் ஆபிரகாம்–செல்வர் இடையே நிகழும் உரையாடல் பதிலளிக்கின்றது.

விவரிப்புப் பகுதியிலே உள்ள ஐந்து வசனங்களில் இந்த தலைகீழ் மாற்றம் அருமையாய் விவரிக்கப்பட்டுள்ளது. உயர் ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்ட செல்வர் பாதாளத்தில் வதைக்கப்படுகிறார். உடல் முழுவதும் புண்ணாய் உணவுத் துண்டுக்காய் காத்துக்கிடந்த இலாசர் ஆபிரகாம் மடியில், அவருக்கு நெருக்கமாய் கொண்டு சேர்க்கப்படுகின்றார். இதுதான் தலைகீழ் மாற்றம். இதற்கான காரணங்களை இனிக் காண்போம்.

**உரையாடல் பகுதி**

இந்த உவமையில் உரையாடல் பெரும்பகுதியாய் அமைந்துள்ளது. இது செல்வருக்கும் ஆபிரகாமுக்கும் இடையே நிகழ்கின்றது. இலாசர் இங்கும் ஓர் அமைந்த கதாப்பாத்திரமாகவே உருவாக்கப்படுகின்றார். தலைகீழ் மாற்றத்திற்கான காரணத்தை ஆபிரகாமே விளக்குவதாய் அமைத்துள்ளார் இயேசு. யூதர்களின் தந்தையான அவர் இவற்றைக் கூறுவதுதான் யூதர்களுக்கு ஏற்புடையதாக அமையும். ஆபிரகாமின் விளக்கம் கீழ்க்காணும் முக்கியமான கருத்துக்களை நிறுவுகின்றன.

1. செல்வருக்கான நலன்களை அவர் தன் வாழ்நாளிலேயே அடைந்து விட்டார். எனவே இப்போது மிகுந்த வேதனைப்படுகிறார் (வச. 25).
2. இலாசர் வாழ்நாளில் வேதனைகளையே அடைந்தார். இப்போது ஆறுதல் பெறுகின்றார் (வச. 25). அதிலிருந்து அவர் இப்போது விலகிச் செல்ல முடியாது.
3. ஒருவரின் செல்வம் அவரது மரணத்திற்குப் பின் அவரைத் தொடராது.
4. ஆனால் ஒருவரது வாழ்நாளின் செயல்களே அவரது இறப்புக்குப் பிறகான வாழ்க்கையை நிர்ணயிக்கும். இறப்புக்குப் பிறகான நிலையை அப்போது மாற்றமுடியாது. இறப்புக்குப் பிறகு நல்நிலையை அடைய வேண்டுமானால், அதற்கானதை இங்கே இருக்கும் போதே செய்து கொள்ள வேண்டும்.
5. செல்வருக்கும் இலாசருக்கும் இறப்புக்குப் பின் ஏற்படும் பிளவு யாராலும் மாற்றமுடியாதது. அது இறைவனால் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அதை ஆபிரகாமோ, இலாசரோ மாற்றமுடியாது, கடந்து போகவும் முடியாது.
6. இறந்த ஒருவர் மீண்டும் வந்து “சாட்சியம்” சொல்வதும் சாத்தியப்படாது. மோசேவுக்கும், இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்காதவர்கள் “இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள்” (வச. 31).

7. ஒருவர் இறப்புக்குப் பின் நல்வாழ்வு பெறவேண்டுமானால் அவரே மோசேயின் திருச்சட்டத்தின் படியும், இறைவாக்குகளின் படியும் – அதாவது திருநூலின் படி வாழ்தலே போதுமானது.

**எங்கே உள்ளது இரக்கம்?**

இந்த உவமையில் இரக்கம், பரிவு என்ற சொல்லாடல்கள் பயன்படுத்தப்படவேயில்லை. மாறாக செல்வர் இலாசரை அவர் நிலையை அறிந்திருந்தும், அவர்மீது இரக்கம் காட்டவில்லை. இலாசரின் அடிப்படைத் தேவையான மேசையிலிருந்து விழும் உணவுத் துண்டுகள் கூட அவருக்கு கிடைக்கவில்லை. 'வாழ்நாளில் நலன்களையே பெற்ற' (வச. 25) செல்வர் இலாசருக்கு உதவவில்லை. செல்வர் தான் பெற்ற செல்வத்தைக் கொண்டு இரக்கச் செயலில் ஈடுபடவில்லை. எனவே அவரின் இறப்புக்குப் பின் இலாசரோ, ஆபிரகாமோ, ஏன் இறைவனேகூட அவருக்கு இரங்க முடியவில்லை. எனவே உவமை முடியும்போது எல்லாம் மகிழ்ச்சியான, சுபமான முடிவாக அமையாமல், இலாசர் ஆபிரகாமின் மடியில் ஆறுதல் அடைவதாகவும், செல்வர் பாதாளத்தில் வதைக்கப்படும் நிலையிலேயே இருப்பதாகவும் முடிகின்றது.

**முடிவாக. . .**

செல்வரும் ஏழை இலாசரும் எனும் இந்த உவமை இரக்கம் காட்டப்படுவதை விவரிப்பதைவிட இரக்கம் காட்டாததால் வரும் விளைவுகளை விவரிப்பதாகவே அமைந்து விடுகின்றது. இரக்கம் காட்டாதவருக்கு ஏழை இலாசரும், ஆபிரகாமும், ஒரு விதத்தில், இறைவனும் இரக்கம் காட்டமுடியாமலே போய்விடுகின்றது. எனவே ''இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்'' (மத் 5:7) எனும் இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவோ பொருள் பொதிந்தவை.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**